# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.S.C.No.53/2019**

Prosecution Witness : **LW - 19 / PW - 5**

Name : அன்பழகன் Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **04.04.2025**

**(21 ம் எதிரிக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)**

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற **WP 33878/2024** உத்தரவின் அடிப்படையில் **Home (Courts. VI A) Department** 09.12.2024 தேதியிட்ட **G.O.(D). No. 1485** ன் படி வழக்கறிஞர் திரு.**B.**மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் பொன்பரப்பி காந்தி நகர் காலனியில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் பறையன் வகுப்பைச் சார்ந்தவர். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். அவர்கள் படையாச்சி வகுப்பைச் சார்ந்தவர்கள். சுமார் 7 வருடத்திற்கு முன்பு பானை சின்னத்தில் திருமாவளவன் தேர்தலில் நின்றார். அவருக்கு போட்டியாக யார் நின்றார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. இரட்டை இலை கட்சிக்காரர்கள் நின்றார்கள். அந்த இரட்டை இலை கட்சிக்காரர்கள் ஆதரவாக யார் யார் வேலை பார்த்தார்கள் என்பது எனக்கு தெரியாது. அன்றைய தினம் நான் ஓட்டு போட்டு விட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். வீட்டில் வந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது தப தப என்று நிறைய வன்னியர் ஆட்கள் ஓடிவந்தார்கள். ஓடி வந்தவர்களில் ஆஜர் எதிரிகள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். அவர்கள் எங்க வீட்டிற்கு வடக்கே போய்விட்டார்கள். நான் அவர்களிடம் என் வீட்டை இப்படி உடைச்சு அடித்து பாதிக்கிறீர்களே என்று கேட்டேன். என் வீட்டை உடைத்து விட்டார்கள். முருகானந்தம் என்பவரை நான்

பார்த்து அவரிடம் இப்படி போட்டு உடைக்கிறார்களே என்று கேட்டேன். அதற்கு அவர் ஒன்றும் சொல்லவில்லை. அப்போது அவர் படலை உடைத்துவிட்டு பறப்பயலிடம் என்ன பேச்சு என்று சொன்னார். என் வீட்டு மூங்கி படலை உடைத்ததில் படல் என் மீது விழுந்துவிட்டது. நான் ஒதுங்கிவிட்டேன். மீசை என்று நாங்கள் கூப்பிடும் நபர் என்னை படல் நட்டிருந்த மூங்கில் கழியை பிடிங்கி என் மண்டையில் அடிக்க வந்தபோது நான் கையால் தடுத்தேன். அதில் எனது வலது கையின் நடுவிரலில் காயம் ஏற்படுத்திவிட்டது. விரல் எலும்பு முறிவு ஆகிவிட்டது. அந்த கழியாலேயே என் விலாவில் அடித்துவிட்டார். என்னை அடித்த மீசை என்ற நபரை என்னால் அடையாளம் காட்ட முடியும். (அனைத்து எதிரிகளையும் அருகில் சென்று சாட்சி பார்த்து விட்டு அந்த மீசை என்பவர் 4ம் எதிரி முருகேசன் என்று அடையாளம் காட்டினார்.) மற்றவர்களுக்கு என்ன ஆயிற்று என்று எனக்கு எதுவும் தெரியாது. நான் அது எதையும் பார்க்கவில்லை. எனக்கு காயம் பட்டிருந்ததால் நான் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். பிறகு அரியலூர் அரசு மருத்துவனையிலும் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அங்கு போலீஸ் DSP என்னை விசாரித்தார்.

<u>**சாட்சி பகுதியாக அரசு தரப்பிற்கு ஆதரவு அற்று சாட்சி சொல்லியிருப்பதால் அவரை பிறழ்சாட்சியாக பாவிக்க சிறப்பு அரசு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.**</u>

என்னை DSP விசாரித்தபோது 18.04.2019 அன்று வாக்குபதிவு அன்று காலையில் நான் ஓட்டு போட்டுவிட்டு மதியம் சுமார் 02.30 மணியளவில் எங்கள் ஊரைச் சேர்ந்த வன்னியர் சாதியை சேர்ந்த நாராயணசாமி மகன் பாலசுப்பிரமணியன் பானை சின்னத்தை போட்டு உடைத்தார் என்றும் அதில் வாக்குவாதம் ஆகி எங்கள் ஊரில் பாமக கட்சியை சார்ந்த முருகேசன், செல்வகுமார், அருள்மணி, ராஜேஷ், அஜித், திருகுமரன், ராஜா, சங்கர், பாண்டியராஜன், வினோத், பிரேம்குமார், விஜயகுமார், சத்தியசங்கர், ராசா, பாஸ்கர், மதியழகன், வெற்றிவேல், இளையராஜா என்கிற புலிக்குட்டி, பிரபு, கொளஞ்சிநாதன், பாலமுருகன், பழனிமுத்து, வேலு, செல்வகுமார், ஜீவா, சொக்கன் என்கிற தெய்வசிகாமணி, சக்திவேல், சங்கர், வாசுதேவன், குடல் என்கிற ராஜசுந்தரம் ஆகியோர்கள் ஒன்று கூடி ஏன்டா பற தேவிடியா பசங்க

எங்களையே அடித்து விட்டு எங்கள் ஊரில் குடியிருக்க முடியுமா என்று திட்டிக்கொண்டு வந்தார்கள் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் ஆமாம். இரும்பு கட்டை, இரும்பு பைப், பண்ட பாத்திரங்கள், மோட்டார் பைக் ஆகியவற்றை அடித்து உடைத்தார்கள் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் இல்லை. வீட்டை அடித்து உடைத்திருக்கிறார்கள் என்று தான் சொன்னேன். DSP என்னை விசாரித்தபோது கண்ணில் பட்டவர்களை கொலை செய்யும் நோக்கத்தோடு தாக்கினார்கள் என்று நான் சொல்லவில்லை. என் வீட்டு ஓட்டை உடைத்தபோது நான் என்ன தப்பு பன்னினேன் என் வீட்டை உடைக்கிறீர்கள் என்று கேட்டேனா என்றால் கேட்டேன். கூட்டத்தில் இருந்தவர்கள் பறத்தேவிடியா பயலே எங்களையே கேள்வி கேட்கிறீயா என்று திட்டி தடியால் தலையில் தாக்க வந்தபோது நான் தடுத்தேன் என்றாலும் அதனால் தான் எனது வலது கை விரலில் காயம் ஏற்பட்டது என்று சொல்லியிருக்கிறேன் என்றாலும் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கும்பொழுது அஜய், செல்வராஜ், பிரகாஷ், பிரபு, கௌதமி, ராஜேந்திரன், ரவி, கிருஷ்ணமூர்த்தி, வடிவேல், செல்வகணபதி, மணிமேகலை, வெற்றிவேல் ஆகியோருக்கும் பலத்த காயம் ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸ் மூலமாக ஜெயங்கொண்டம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்று சொன்னேனா என்றால் ஆமாம். எங்கள் ஊரில் வன்னியர்கள் புகுந்ததால் ஊரில் இருந்த பாதி பேர் ஓடி விட்டதாக நான் போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் ஆமாம். இந்த வழக்கு சம்பந்தமாக யார் கேஸ் கொடுத்தார்கள் என்பதும் கேஸ் விவரமும் எனக்கு தெரியாது. நான் மற்றவர்களை அடித்ததையும், அவர்களது வீட்டை உடைத்ததையும் நான் பார்த்தேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் மூங்கில் கழி இது கிடையாது. அந்த மூங்கில் கழி இதை விட பெரியதாக இருக்கும்.

<u>16 முதல் 33 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

அன்று நான் ஓட்டு போட்டேன். எங்கள் குடியிருப்பிலிருந்து எல்லோரும் ஓட்டு போட்டார்களா என்றால் பாதி பேர் ஓட்டு போடவில்லை. பிரச்சனைக்கு பிறகு எல்லோரும் ஓட்டு போட போனார்களா என்றால் அது எனக்கு தெரியாது. அரசு தரப்பு வழக்கறிஞர் கூறிய நபர்களின் பெயர் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னை அடித்தவர் பெயர் மட்டும் தான் தெரியும். என்னை **DSP** விசாரித்தபோது

என்னை மீசை தான் அடித்தார் என்று தான் சொன்னேன். முருகேசன் தகப்பனார் பெயர் ஞானியார் என்பவர் யார் என்று கேட்டால் எனக்கு அது தெரியாது. என்னை யார் அடித்தார்கள் என்று குறிப்பாக நான் **DSP** யிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். எங்கள் வீட்டை யார் யார் உடைத்தார்கள் என்று குறிப்பாக நான் **DSP** யிடம் சொன்னேனா என்றால் இல்லை. அந்த பானையை எங்கு வைத்து உடைத்தார்கள் என்பதும் எனக்கு தெரியாது. அந்த பானை உடைத்ததாக சொல்லும் சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. நான் ஓட்டு போட்டு விட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். எனக்கு வேறு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகள் எங்கள் தெரு வழியாக ஓடி வரவில்லை என்றாலும் நான் தவறுதலாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்களுக்கு காயம் பட்டது பற்றி எனக்கு எதுவும் தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெற வில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>1 முதல் 14 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்னதைத்தான் DSP விசாரணையின்போதும் சொன்னேனா என்றால் சொன்னேன். மீண்டும் மீண்டும் என்னை குறுக்கு குறுக்காக கேள்வி கேட்டால் என் உயிருக்கு உத்திரவாதம் கிடையாது என்று சொல்கிறார். அரசு தரப்பு வழக்கறிஞர் கூறிய பெயர்கள் எனக்கு அவர் சொல்லித்தான் தெரியும் என்றால் சரியல்ல எனக்கு ஆட்கள் ஓடிவந்தது தான் தெரியும்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.S.C.No.53/2019**

Prosecution Witness : **LW - 20 / PW - 6**

Name : ரவி Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **04.04.2025**

**(21 ம் எதிரிக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)**

**இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற WP 33878/2024 உத்தரவின் அடிப்படையில் Home (Courts. VI A) Department 09.12.2024 தேதியிட்ட G.O.(D). No. 1485 ன் படி வழக்கறிஞர் திரு.B.மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.**

**முதல் விசாரணை**

நான் பொன்பரப்பி காலனி தெருவில் குடியிருக்கிறேன். எனக்கு சாட்சி சொன்ன அ.சா.5 அன்பழகனை தெரியுயம். எங்கள் தெருக்காரர்தான். நான் படையாச்சி வகுப்பைச் சார்ந்தவர். எங்கள் காலனியில் குடியிருப்பவர்கள் எல்லோருமே பறையன் வகுப்பைச் சார்ந்தவர்கள் தான். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். அவர்கள் வன்னியர் வகுப்பைச் சார்ந்தவர்கள். அவர்கள் பொன்பரப்பியில் தான் குடியிருக்கிறார்கள். சுமார் 6 வருடத்திற்கு முன்பு இந்த வழக்கு சம்பவம் நடந்தது. பானை சின்னத்தில் திருமாவளவன் தேர்தலில் நின்றார். அவர் திமுக கூட்டனியில் நின்றார். அவருக்கு போட்டியாக இரட்டை இலை பாமக கூட்டனியில் நின்றார்கள். நான் திருமாவளவனுக்க ஆதரவாக இருந்தேன். எதிரிகள் அனைவரும் இரட்டை இலை காரர்களுக்கு ஆதரவாக இருந்தார்கள். அன்றைய தினம் தேர்தலில் நான் 12.00 மணிக்கு ஓட்டு போட போய்விட்டு 02.00 மணிக்கு ஓட்டு போட்டுவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன்.

வீட்டில் நான் மதியம் 02.30 மணிக்கு சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது பைபாஸ் ரோட்டில் கோ கொள்ளையோ என ஒரே சத்தமாக இருந்தது. நான் பைபாஸ் ரோட்டிற்கு ஓடி போய் பார்த்தேன். அப்போது பானை ரோட்டில் உடைந்து கிடந்தது. எங்கள் தெருவில் இருந்த விசிக கட்சியின் பானை கொடி கம்பம் தள்ளி விடப்பட்டு ரோட்டில் கிடந்தது. அந்த இடம் பறையர்கள் குடியிருக்கும் இடம். என்னுடைய மகன்கள் ரகுமான், ராஜவேல் ஆகியோர்கள் எங்கே என்று நான் தேடினேன். அவர்கள் அந்த இடத்தில் இல்லை. வன்னியர் சமுதாயத்தை சேர்ந்த ஊர்க்காரர்கள் நீயெல்லாம் பானைக்கு ஓட்டு போட்டவன் தானே என்று என்னை விரட்டினார்கள். மேலும் பற தேவடியா மகனே, குச்சிக்காரி மகனே இவனை அடிச்சு கொல்லுங்கடா என்று அவர்கள் சொன்னார்கள். நான் கூட்டத்தை பார்த்து விட்டு ஓடிப்போய் விட்டேன். அவ்வாறு கூட்டமாக வந்தவர்கள் நீதிமன்றத்தில் தற்போது இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். அவர்கள் கையில் பைப் கம்பி, மூங்கில் கழி ஆகியவைகளை வைத்திருந்தார்கள். எங்கள் வீடுகளையும் வண்டி வாகனங்களையும் ஆண்கள் பெண்கள் அனைவரையும் அடித்து உடைத்தார்கள். எனக்கும் காயம் ஏற்பட்டது. கை உடைந்துவிட்டது. நான் என்னுரிமை ஓட்டு போடுகிறேன் என்று சொன்னேன். என்னை ஒரு 10 பேர் சேர்ந்து அடித்துவிட்டார்கள். பைப்பு, கம்பி, மரக்கட்டை, மூங்கில் கட்டை ஆகியவற்றால் அடித்துவிட்டார்கள். எனது வலது முழங்கை உடைந்துவிட்டது. தோள்பட்டையிலும் தலையிலும் காயம் ஏற்பட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் சான்று பொருட்களை விட எதிரிகள் என்னை அடிக்க பயன்படுத்திய ஆயுதங்கள் இன்னும் பெரியவையாக இருந்தது. வேறு நிறைய பேருக்கும் காயம் ஏற்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயத்தில் நான் மயங்கி விழுந்துவிட்டேன். அ.சா.5 அன்பழகனுக்கும் வடிவேலுக்கும் மணிமேகலைக்கும் இன்னும் நிறைய பேருக்கும் காயம் ஏற்பட்டது. என்னை அடித்தவர்களை என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் அடையாளம் காட்ட முடியும். சங்கர், வெற்றி, ஜேசிபி பாஸ்கர், குமார் ஆகியோர் தான் என்னை தாக்கியவர்கள். அவர்களையும் என்னால் அடையாளம் காட்ட முடியும். (நீதிமன்றம் ஆஜர் எதிரிகளில் அவர் சொன்ன நபர்களை அடையாளம் காட்டும்படி

சொன்னதன் பேரில் சாட்சி **A32, A31** ஆகிய இருவரை மட்டும் சாட்சி அடையாளம் காட்டினார்.) ஊருக்குள் வந்த நபர்களில் ஆஜர் எதிரிகள் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். எனக்கு காயம் ஏற்பட்ட பின்பு ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கிருந்து பிறகு தஞ்சாவூர் மருத்துவமனைக்கு சென்று தொடர் சிகிச்சைக்கு சென்றேன். **4, 5** நாட்கள் சிகிச்சை பெற்றேன். வழக்கு குறித்து **DSP** என்னை விசாரித்தார்.

**சாட்சி பகுதியாக அரசு தரப்பிற்கு ஆதரவு அற்று சாட்சி சொல்லியிருப்பதால் அவரை பிறழ்சாட்சியாக பாவிக்க சிறப்பு அரசு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.**

என்னை DSP விசாரித்தபோது 18.04.2019 அன்று எங்கள் ஊர் பாமக கட்சியை சார்ந்த முருகேசன், செல்வகுமார், அருள்மணி, ராஜேஷ், அஜித், திருகுமரன், ராஜா, சங்கர், பாண்டியராஜன், வினோத், பிரேம்குமார், விஜயகுமார், சத்தியசங்கர், ராசா, பாஸ்கர், மதியழகன், குடல் என்கிற ராஜசுந்தரம், வெற்றிவேல், இளையராஜா என்கிற புலிக்குட்டி, பிரபு, கொளஞ்சிநாதன், பாலமுருகன், ராமு என்கிற ராமகிருஷ்ணன், பழனிமுத்து, வேலு, கார்த்திக், செல்வகுமார், ஜீவா, சொக்கன் என்கிற தெய்வசிகாமணி, சக்திவேல், சங்கர், வாசுதேவன், ஆகியோர்கள் ஒன்று சேர்ந்து ஊருக்குள் வந்து என்னையும் மற்றவர்களையும் ஏன்டா பறத்தேவிடியா பசங்களா என திட்டி என்னையும் எங்கள் தெருவில் இருந்த நிறைய பேர்களையும் அடித்துவிட்டார்கள் என்றாலும் எங்கள் வீடுகளையும், பண்ட பாத்திரங்களையும் இரும்பு கட்டை, இரும்பு பைப், மோட்டார் பைக் ஆகியவற்றை அடித்து உடைத்தார்கள் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சொன்னேன். ஏன் இப்படி அட்டூழியம் பன்னுகிறீர்கள் என்று நான் கேட்டதால் தான் 10 பேர் என்னை சேர்ந்து அடித்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எங்கள் ஊரைச் சேர்ந்த அஜய், செல்வராஜ், பிரகாஷ், பிரபு, கௌதமி, ராஜேந்திரன், ரவி, கிருஷ்ணமூர்த்தி, வடிவேல், செல்வகணபதி, மணிமேகலை, வெற்றிவேல் ஆகியோருக்கும் பலத்த காயம் ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸ் மூலமாக ஜெயங்கொண்டம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்று சொன்னேனா என்றால் என்னை தனியாக முதலில்

அனுப்பிவிட்டார்கள். அடிபட்ட நபர்களை பற்றி நான் போலீஸ் விசாரணையில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னை DSP விசாரித்தபோது ஊரில் உள்ளவர்கள் அடித்ததாகத்தான் சொன்னேன். குமார், வெற்றி, ஜேசிபி பாஸ்கர் ஆகியோர் குறிப்பாக அடித்ததாக குறிப்பிட்டு சொன்னேனா என்றால் இல்லை. ஆஜர் எதிரிகளின் அப்பா பெயர் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளில் சிலரது பெயர் தெரியும், சிலரது பெயர் தெரியாது. ஆஜர் எதிரிகளில் ஜீவா யார் என்று கேட்டால் எனக்கு அது தெரியாது. ராமகிருஷ்ணன் யார் என்று கேட்டால் அதுவும் எனக்கு தெரியவில்லை. எனக்கு எதிரிகள் பற்றி எதுவும் தெரியாது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் DSP விசாரணையில் சொல்லியுள்ள பெயர்களை போலீசாரே எழுதிக்கொண்டார்கள் என்றால் சில குறிப்பிட்ட பெயர்களைத்தான் நான் சொன்னேன். வெற்றிவேல் யார் என்று கேட்டால் எனக்கு தெரியும் என்று சாட்சி அடையாளம் காட்டினார். வெற்றிவேல் டிராக்டர் வைத்திருக்கிறார். வெற்றிவேலின் அப்பா பெயர் பழனிச்சாமி என நினைக்கிறேன். அரசு வழக்கறிஞர் படித்து காட்டியதால் தான் என்னால் பெயர்கள் சொல்லமுடிகிறது என்றாலும் ஆஜர் எதிரிகளுக்கும் சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. குமார், வெற்றி, ஜேசிபி பாஸ்கர் ஆகியோர் என்னை அடித்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் தற்போது நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொன்னதைத்தான் DSP யிடமும் சொன்னேன் என்றால் சரிதான். என்னை DSP மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**<u>IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.</u>**

Case No: **SPL.S.C.No.53/2019**

Prosecution Witness : **LW -22 / PW - 7**

Name : ரஜேந்திரன் Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **<u>04.04.2025</u>**

**(21 ம் எதிரிக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)**

<u>இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற **WP 33878/2024** உத்தரவின் அடிப்படையில் **Home (Courts. VI A) Department** 09.12.2024 தேதியிட்ட **G.O.(D). No.** 1485 ன் படி வழக்கறிஞர் திரு.**B.**மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் பொன்பரப்பி காந்தி நகர் காலனியில் குடியிருக்கிறேன். நான் பறையன் வகுப்பைச் சார்ந்தவர். எனக்கு முன்பு சாட்சி சொன்ன அ.சா.5 அன்பழகன் மற்றும் அ.சா.6 ரவி ஆகியோர் என் சாதியைச் சேர்ந்தவர்கள் தான். எங்கள் தெருக்காரரகள்தான். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் அனைவரும் வன்னியர் சாதி. பாமக கட்சியை சார்ந்தவர். 2019 ஏப்ரல் மாதம் 18 ஆம் தேதி இந்த வழக்கு சம்பவம் நடந்தது. சிதம்பரம் பாராளுமன்ற தொகுதியில் பானை சின்னத்தில் திருமாவளவன் தேர்தலில் நின்றார். அவர் திமுக கூட்டனியில் நின்றார். அவருக்கு போட்டியாக இரட்டை இலை பாமக கூட்டனியில் சந்திரசேகரன் என்பவர் அதிமுக வேட்பாளராக நின்றார். தேர்தலுக்கு முன்பு வன்னியர் சமூகத்தை சேர்ந்தவர்கள் எங்களிடம் நாங்கள் பானைக்கு ஓட்டுபோடக்கூடாது என்று சொன்னார்கள். அன்றை தேர்தலில் கலவரம் ஏதேனும் நடக்க வாய்ப்புண்டு என நினைத்து நானும்,

எங்கள் மக்களும் சீக்கரமாகவே ஓட்டு போட்டுவிட்டோம். 02.30 மணிக்கு ஓட்டு போட்டுவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். மதியம் 02.30 மணிக்கு ஒரே இரைச்சலாக சத்தம் கேட்டது. நான் வீட்டிலிருந்து வெளியே வந்து பார்த்தேன். வன்னியர்கள் எல்லோரும் சேர்ந்து உருட்டு கட்டை, பைப், அருவாள், பெட்ரோல் கேன், கருங்கல் சல்லி மூட்டை ஆகியவற்றோடு எங்கள் காலனி உள்ளே வந்தார்கள். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் கொடியை அறுத்துவிட்டு வீடுகளை உடைத்தார்கள். பறதேவடியா பசங்கள ஓட்டு போடக்கூடாது என்று சொன்னாலும் மீறி போய் ஓட்டு போடுகிறார்கள் என்று சத்தம் போட்டார்கள். என் வீட்டையும் அடித்து உடைத்தார்கள். அவ்வாறு அடித்து உடைத்தவர்கள் நீதிமன்றத்தில் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். (அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் எதிரிகளில் அவர் வீட்டை உடைத்த நபர்களை அடையாளம் காட்ட சொன்னதன் பேரில் சாட்சி எதிரி முருகேசன்(A4) , மெக்கானிக் வேலு (A15), ஆனந்தன் (அந்த எதிரியின் பெயரைக் கேட்டதில் அவர் முருகானந்தம் என்று சொன்னார்), அவரது தம்பி சரவணன், பழனிச்சாமி ( அந்த எதிரியின் பெயரைக் கேட்டதில் மதியழகன் என்று சொன்னார்) சாட்சி அந்த நபரின் அண்ணன் பெயர் பழனிச்சாமி என்று சொன்னார். மற்றவர்களின் பெயர் எனக்கு தெரியவில்லை.) நான் என் வீட்டை ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டேன். என் வீடு ஆஸ்பெட்டாஷ் போட்ட வீடு. வீடு உடைந்துவிட்டது. நான் ஏன் என் வீட்டை உடைக்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு ஒரு நபர் ஓட்டு போடக்கூடாது என்று சொல்லியும் பற தேவிடியா பயலே ஓட்டு போட்டு விட்டு வந்து நம்மளையே கேள்வி கேட்கிறான் என்று சொல்லி நீட்டு கொம்பால் அடிக்க வந்தார். நான் தடுத்ததில் எனது இடது கையில் காயம் ஏற்பட்டது. என்னிடம் காட்டப்படும் சான்று பொருட்களில் உள்ள நீட்டு கொம்பு தான் என்னை அடிக்க பயன்படுத்தியதாகும். அது சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. எனது இடது கையில் அடிப்பட்டதால் நான் வீட்டிற்குள் ஓடிவிட்டேன். என் வீட்டின் சேதம் சுமார் ரூ.10,000/- இருக்கும். மற்றவர்கள் யார் யாருக்கு காயம் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அன்பழகனின் கை விரல் உடைந்துவிட்டது. கிருஷ்ணமூர்த்திக்கு நெஞ்சில் அடிப்பட்டு விட்டது. மணிமேகலைக்கு தலையில்

அடிப்பட்டுவிட்டது. மணிமேகலையின் மகன் தேவாவிற்கும் அடிப்பட்டுவிட்டது. செல்வராஜுக்கும் அடிப்பட்டுவிட்டது. பஞ்சு மகன் வெற்றிக்கு அடிப்பட்டுவிட்டது. ரவிக்கு அடிப்பட்டு தஞ்சாவூர் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். பிரபுவிற்கும் அடிப்பட்டது. மேலும் சிலருக்கு அடிப்பட்டு புறநோயாளியாக சிகிச்சை பெற்றார்கள். நானும் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். இந்த சம்பவம் குறித்து குணசீலன் என்பவர் புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக DSP என்னை விசாரித்தார். அவரிடம் நான் நடந்ததை சொன்னேன். DSP விசாரித்தபோது அங்கு வந்திருந்தவர்களின் பெயர்களை நான் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னை DSP விசாரித்தபோது 33 நபர்களின் பெயரை சொன்னேனா என்றால் சொன்னேன். அவர்களின் அப்பா பெயரை சொன்னேனா என்றால் இல்லை. ஒரு சிலரின் அப்பா பெயரைத்தான் சொன்னேன். நான் முதல் விசாரணையில் அடையாளம் காட்டிய நான்கு பெயர்களை தவிர மற்ற எதிரிகளின் பெயர் தெரியாது. ஆனால் அவரகள் எங்கள் ஊர்க்காரர்கள்தான். DSP விசாரித்தபோது என்னை அடித்த நபர்கள் யார் என்று குறிப்பிட்டு சொன்னேனா என்றால் சொன்னேன். நான் 10ம் வகுப்பு படித்திருக்கிறேன். நான் கோயம்பேடு மார்க்கெட்டில் வியாபாரம் செய்கிறேன். எனக்கு நான்கு பிள்ளைகள். 1 மகனும், 1 மகளும் இன்சினியர், மற்றொரு மகனும், மகளும் பி. பார்ம் படித்திருக்கிறார்கள். குணசீலன் புகார் கொடுத்தபோது நான் உடன் சென்றேனா என்றால் இல்லை. என்னை DSP மருத்துவமனையில் வைத்து விசாரித்தாரா என்றால் ஆமாம். என்னிடம் கையெழுத்து வாங்கினாரா என்றால் அது எனக்கு சரியாக ஞாபகமில்லை. DSP என்னை விசாரித்தபோது வந்த நபர்கள் அருவாள், கருங்கல், பெட்ரோல் கேன் ஆகியவற்றோடு வந்தார்கள் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். ஆஜர் எதிரிகளில் சரவணன் என்பவரை அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும். (சாட்சி எதிரிகளில் ஒரு நபரை அடையாளம் காட்டினார். அவர் பெயரை கேட்டதில் அவர் தனது பெயர் சிவானந்தம் என்று சொன்னார்.) நான் சொன்ன விதத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும்

சரியல்ல. எனக்கு யாருடைய பெயரும் தெரியாது என்றாலும் போலீசார் சொன்னதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிரிகள் எங்கள் பகுதியை தாக்கவில்லை என்றாலும் அவர்களுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. என்னை ஜெயங்கொண்டம் மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸில் அனுப்பி வைத்தார்களா என்றால் ஆமாம். போலிசார் அனுப்பி வைத்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொன்ன சாட்சியத்தைத்தான் DSP விசாரித்தபோதும் சொன்னேனா என்றால் ஆமாம். என்னை தாக்கியதாக சொல்லியுள்ள நபர்கள் என்னை தாக்கவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளில் அதிமுக, திமுக கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. பாமககாரர்கள் இருப்பதுதான் தெரியும். என்னை யாரும் சாதியை சொல்லி திட்டவில்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SPL.S.C.No.53/2019** |
| Prosecution Witness : | **LW – 23 / PW - 8** |
| Name : செல்வகணபதி | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **04.04.2025**

**(21 ம் எதிரிக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)**

<u>இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற **WP 33878/2024** உத்தரவின் அடிப்படையில் **Home (Courts. VI A) Department** 09.12.2024 தேதியிட்ட **G.O.(D). No. 1485** ன் படி வழக்கறிஞர் திரு.**B.**மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் பொன்பரப்பி காந்தி நகர் காலனி தெருவில் வசித்து வருகிறேன். நான் பறையன் வகுப்பைச் சார்ந்தவர். எங்கள் காந்தி நகர் காலனியில் எங்கள் வகுப்பைச் சார்ந்தவர்கள்தான் வசிக்கிறோம். ஆஜர் எதிரிகளில் பாதி பேர்களை தெரியும். அவர்கள் அனைவரும் வன்னியர் சாதியைச் சார்ந்தவர்கள். என் அம்மா பெயர் மணிமேகலை. நான் சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறி சந்தையில் வேலை செய்கிறேன். எனக்கு முன்பு சாட்சி சொன்ன அ.சா.5 அன்பழகன் மற்றும் அ.சா.6 ரவி ஆகியோர் என் சாதியைச் சேர்ந்தவர்கள் தான். எங்கள் தெருக்காரர்கள்தான். எதிரிகள் அனைவரும் வன்னியர் சாதி. 2019 தேர்தலில் விசிக திமுக சார்பில் திருமாவளவன் என்பவர் பானை சின்னத்தில் தேர்தலில் நின்றார். அவரை எதிர்த்து பாமக, அதிமுக கூட்டணியில் அதிமுக சார்பில் சந்திரசேகர் என்பவர் நின்றார். 2019 ஏப்ரல் மாதத்தில் தான் தேர்தல் நடந்தது. நான் ஓட்டு போட்டேன். அன்று மதியம் 03.00 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தபொழுது

சவுண்டு கேட்டது. நான் வீட்டில் டீவி பார்த்துக்கொண்டிருந்தேன். சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தேன். ஆஜர் எதிரிகளும் இன்னும் நிறைய பேரும் எங்கள் தெருவில் இருந்த ஓட்டு வீடுகளை அடித்து உடைத்துவிட்டார். எங்கள் தெருவைச் சேர்ந்த நிறைய பேரை அடித்தார்கள். பானை சின்னத்திற்கு ஏன் ஓட்டு போட்டீர்கள் என்று பறதேவிடியா பசங்க என்று சொல்லி திட்டினார்கள். என்னை ஒரு குரூப் காரர்கள் இரும்பு பைப், உருட்டு கட்டை ஆகியவற்றால் அடித்தார்கள். (நீதிமன்றத்தில் இருக்கும் சான்று பொருட்களை சாட்சியிடம் காட்டி கேட்கப்பட்டதில் தன்னால் அடையாளம் காட்டமுடியாது என்று சொன்னார்.) எனக்கு தலையிலும், வலது காலிலும் காயம் ஏற்பட்டது. என் வீட்டிற்கு முன்பாக இருந்த தாழ்வாரத்திலிருந்த ஓட்டை முக்கால்வாசி உடைத்துவிட்டார்கள். டீவியையும் உடைத்துவிட்டார்கள். நான் அடிப்பட்டதை பார்த்து என் அம்மா வந்தார். எனக்கு அடிப்பட்டதில் ரத்தம் வந்ததால் மயக்கம் ஆகிவிட்டது. நான் வீட்டிற்கு வரும்போதே என் அம்மாவையும் அடித்துவிட்டார்கள். ஆஜர் எதிரிகளில் 3 பேரை மட்டும் தான் என்னால் அடையாளம் காட்ட முடியும். ( ஆஜர் எதிரி வெற்றிவேல், பச்சை சட்டைக்காரர் கொளஞ்சி, ஆஜராகாத எனக்கு பெயர் தெரியாத மற்றொரு நபர். என்னை அடித்தவர்களில் ஆஜர் எதிரி வெற்றிவேல் இருந்தார். அடிப்பதற்கு முன்பு பறதேவிடியா மகனே என்று திட்டினார். கொளஞ்சி என் வீட்டை அடித்தார். அப்போது நான் வீட்டிற்குள்ளே கதவை சாத்திக்கொண்டு இருந்தேன். சன்னல் வழியாக பார்த்ததில் கொளஞ்சி என் வீட்டை அடித்ததை பார்த்தேன். நிறைய பேருக்கு அடிப்பட்டிருந்தது மருத்துவமனைக்கு போன போது எனக்கு தெரியும். அடிப்பட்டவர்கள் யார் என்று கேட்டால் மணிமேகலை, ரவி, வடிவேல், சுபாஷ்சந்திரபோஸ், வெற்றிவேல் மற்றும் சிலர். மொத்தமாக எத்தனை பேர் என்று கேட்டால் சுமார் 13 பேர் இருக்கலாம் எனக்கு அதுவும் சரியாக தெரியாது. என் அம்மாவிற்கு அடிப்பட்ட பிறகு என் அப்பா வந்தார். எனக்கு அடிப்பட்டதும் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை சேர்ந்தேன். பிறகு தஞ்சாவூர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். குணசீலன் புகார் கொடுத்தார். என்னை போலீசார் விசாரித்தார்கள். போலீசார் களவரம் நடந்த வீடியோவை காட்டி என்ன நடந்தது என்று என்னிடம் கேட்டார்கள். எங்கள் ஊர்க்காரர்கள் வீடியோவை

பாஸ் செய்து அதில் ஒரு நபரை காட்டி அவரது பெயர் என்னவென்று சொன்னார்கள். அந்த நபர் என்னை அடிக்க வந்தாரா என்றும் தெருவிற்குள் வந்தாரா என்றும் கேட்டார்கள். அந்த போட்டோ வீடியோ அந்த எலெக்சன் தேதியில் நடந்த சம்பவத்தின்போது எடுத்து யூடியூபில் வந்ததாக சொன்னார்கள். அதை யார் எடுத்தார்கள் என்பது எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக DSP என்னை விசாரித்தார்கள். அந்த வீடியோவை பார்த்தால் என்னால் சொல்லமுடியுமா என்றால் அந்த நபரின் பெயர் தெரியாது, கலவரத்தை பற்றி சொல்லமுடியும்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

என்னை வெற்றிவேல், கொளஞ்சி அடித்தார்கள் என்று DSP விசாரணையின் போது குறிப்பாக சொன்னேனா என்றால் சொன்னேன். வெற்றிவேல் என்னை சாதியை சொல்லி திட்டியதாகவும் DSP விசாரித்தபோது சொன்னேன். நான் வீட்டிற்குள்ளேயே இருந்து சன்னல் வழியாக பார்த்தபொழுது என் வீட்டை உடைத்தது பற்றி DSP விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொல்லியிருக்கிறேன். ஆஜர் எதிரிகளின் எல்லோருடைய பெயரும் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகள் 30 பேரில் 4, 5 நபர்களின் பெயர்தான் எனக்கு தெரியும். DSP என்னை விசாரித்தபோது 33 பெயர்களின் பெயரையும் நான் சொன்னேனா என்றால் சொன்னேன். சம்பவம் நடந்த அன்று மாலை 6.00 மணிக்கு எங்கள் தெருவைச் சேர்ந்தவர்கள் சிலர் நாங்கள் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு வந்து வீடியோவை காட்டி நிறைய பேர் வந்து அடித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஊர்க்காரர்கள் சொல்லித்தான் அந்த நபர்களின் பெயர்கள் தெரியும் என்றால் வீடியோவை காட்டும்பொழுது ஊர்க்காரர்கள் அவர்கள் எல்லாம் வந்திருக்கிறார்களா என்று என்னிடம் கேட்டார்கள். நான் அடையாளம் காட்டினேன், அப்பொழுது ஊர்க்காரர்கள் தான் பெயர் சொன்னார்கள். எத்தனை பேர் அன்று மருத்துவமனைக்கு வந்து என்னை பார்த்தார்கள் என்றாலும் வீடியோ பார்க்கும்பொழுது எவ்வளவு பேர் ஊர்க்காரர்கள் என்றாலும் 15, 20 பேருக்கும் மேல் இருந்திருப்பார்கள். அவ்வாறு வந்த ஊர்க்காரர்கள் காயம்பட்ட எல்லோரையும் பார்த்து பேசினார்களா என்றால் ஆமாம். என்னை வெற்றிவேல், கொளஞ்சி ஆகியோர்கள் தாக்கியதாக நான் கூறுவது பொய்

என்றால் சரியல்ல. அதேபோல் வெற்றிவேல் என்னை சாதியை சொல்லி திட்டியதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் யாரும் இந்த சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றாலும் அடையாளம் தெரியாத வேறு நபர்கள் தான் ஈடுபட்டார்கள் என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதைத்தான் DSP விசாரணையின்போதும் சொன்னேனா என்றால் ஆமாம். குணசீலன் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித் சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**<u>IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.</u>**

| | |
|---|---|
| Case No: | **SPL.S.C.No.53/2019** |
| Prosecution Witness : | **LW – 27 / PW - 9** |
| Name : மணிமேகலை | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **<u>04.04.2025</u>**

**(21 ம் எதிரிக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)**

<u>இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற **WP 33878/2024** உத்தரவின் அடிப்படையில் **Home (Courts. VI A) Department** 09.12.2024 தேதியிட்ட **G.O.(D). No. 1485** ன் படி வழக்கறிஞர் திரு.**B.**மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் பொன்பரப்பி காந்தி நகர் காலனி தெருவில் வசித்து வருகிறேன். நான் பறையன் வகுப்பைச் சார்ந்தவர். எங்கள் காந்தி நகர் காலனியில் எங்கள் வகுப்பைச் சார்ந்தவர்கள்தான் வசிக்கிறோம். அ.சா.8 செல்வகணபதி என் மகன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆனால், பெயர் தெரியாது. அவர்கள் அனைவரும் வன்னியர் சாதியைச் சார்ந்தவர்கள். எதிரிகளும் எங்கள் ஊர்க்காரர்கள் தான். சுமார் 6 வருடத்திற்கு முன்பு தேர்தல் நடந்தது. விசிக திமுக சார்பில் திருமாவளவன் என்பவர் பானை சின்னத்தில் தேர்தலில் நின்றார். அவரை எதிர்த்து பாமக, அதிமுக கூட்டணியில் அதிமுக சார்பில் வேட்பாளர் நின்றார். அந்த தேர்தலின்போது எதிரிகள் பாமகவுக்கு ஆதரவாக வேலை பார்த்தார்கள். நான் ஓட்டு போட போனேன். ஓட்டு போட்டுவிட்டு திரும்பி வரும் வழியில் பானை உடைந்து கிடந்தது. பறயனுக்கு ஓட்டு வேற கேட்குதா என்று திட்டினார்கள் என்று நான் கேள்விப்பட்டேன். பிறகு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். சாப்பிட்டுவிட்டு வீட்டில் இருந்தபொழுது மதியம் 02.30,

03.00 மணியளவில் கோ, கொள்ளையே என சத்தம் கேட்டது. வீட்டிற்குள் நான், என் கணவர், என் மகன் அ.சா.8 ஆகியோர்கள் இருந்தோம். சத்தம் கேட்டு என் மகன் வெளியே ஓடினான். பையன் ஓடுகிறானே என்று நானும் பின்னாலேயே ஓடினேன். நான் போவதற்குள்ளேயே என் மகனுக்கு நெற்றியில் காயம்பட்டு ரத்தம் வந்தது. என் மகன் தலையிலிருந்து ரத்தம் வந்ததால் நான் என் மகனை பிடித்து காயத்தில் கை வைத்தேன். அப்போது எங்கிருந்தோ கல் ஒன்று வந்து என் தலையில் விழுந்தது. எனக்கும் மயக்கம் வந்துவிட்டது. அப்பொழுது நிறைய பேர் இருந்தார்கள். ஆஜர் எதிரிகள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். என் வீட்டு ஓட்டை முக்கால்வாசி உடைத்துவிட்டார்கள். நாங்கள் வீட்டிற்குள் சென்று கதவை சாத்திக்கொண்டோம். வெற்றி, செல்வராசு, அன்பாயிரம் மற்றும் 7 பேருக்கு காயம் ஆகிவிட்டது. 50, 60 வீடுகளையும் உடைத்துவிட்டார்கள். அவ்வாறு வீட்டை உடைத்தவர்கள் ஆஜர் எதிரிகளாக இருக்கிறார்களா என்றால் ஆமாம். அப்போது வந்த நபர்கள் கையில் கைத்தடி, கம்பி, கல் ஆகிய ஆயுதங்களை வைத்திருந்தார்கள். நாங்கள் ஆம்புலன்ஸில் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டோம். எங்களை DSP விசாரணை செய்தார். DSP என்னை விசாரித்தபொழுது நான் என்ன சொன்னேன் என்று கேட்டால் அதை இப்போது மறந்துவிட்டேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

பானை உடைந்து கிடந்த இடம் ஓட்டு போட்ட பள்ளிக்கூடத்திற்கு அருகில் உள்ள ரோட்டில். ஆஜர் எதிரிகள் அன்றைய தேதியில் எங்கள் தெரு பக்கம் வரவில்லை என்றாலும் அவர்களுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை எ'னறாலும் சரியல்ல. ஆஜர் எதிரிகள் யாரும் யாரையும் அடிக்கவில்லை என்றாலும் வீடுகளை அடித்து உடைக்கவில்லை என்றாலும் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SPL.S.C.No.53/2019** |
| Prosecution Witness : | **LW – 29 / PW - 10** |
| Name : **கௌதமி** | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day
**04.04.2025**

**(21 ம் எதிரிக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)**

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற **WP 33878/2024** உத்தரவின் அடிப்படையில் **Home (Courts. VI A) Department** 09.12.2024 தேதியிட்ட **G.O.(D). No. 1485** ன் படி வழக்கறிஞர் திரு.**B.**மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் பொன்பரப்பி காந்தி நகர் காலனி தெருவில் வசித்து வருகிறேன். நான் பறையன் வகுப்பைச் சார்ந்தவர். எங்கள் காந்தி நகர் காலனியில் எங்கள் வகுப்பைச் சார்ந்தவர்கள்தான் வசிக்கிறோம். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் அனைவரும் வன்னியர் சாதியைச் சார்ந்தவர்கள். எதிரிகளும் எங்கள் ஊர்க்காரர்கள் தான். சுமார் 6 வருடத்திற்கு முன்பு 18.04.2019 அன்று தேர்தல் நடந்தது. விசிக திமுக சார்பில் திருமாவளவன் என்பவர் பானை சின்னத்தில் தேர்தலில் நின்றார். அவரை எதிர்த்து பாமக, அதிமுக கூட்டணியில் அதிமுக சார்பில் வேட்பாளர் நின்றார். அந்த தேர்தலின்போது எதிரிகள் பாமகவுக்கு ஆதரவாக வேலை பார்த்தார்கள். எதிரிகள் பாமக கட்சியை சார்ந்தவர்கள். நான் 12.00 மணியளவில் ஓட்டு போட போனேன். அப்போது ஓட்டு பூத்துக்கு முன்பாக வெளியில் ரோட்டில் பானையை உடைத்திருந்தார்கள். நான் போய் ஓட்டு போட்டுவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். மதியம் 02.30 முதல் 03.00 மணியளவில் வீட்டிற்கு வெளியே பாத்திரம்

தேய்த்துகொண்டிருந்தபொழுது ஆஜர் எதிரிகள் பானையை உடைத்தார்கள். கட்சி கொடி கம்பத்தை பிய்த்து கடாசினார்கள். அதன் பிறகு குச்சி, கல், டியூப் லைட், கம்பி ஆகியவற்றை கையில் எடுத்துக்கொண்டு வந்து காலனி தெருவிற்கு வந்து பறத்தேவடியா பசங்களா, தேவிடியா பசங்கலா வெளியே நிற்பவர்களை எல்லாம் அடியுங்கள் என்று சத்தம் போட்டார்கள். யார் ஓடினாலும் விடாதிங்க, வீட்டையும் அடித்து பெட்ரோல் ஊற்றி கொளுத்துங்கடா என்று சொன்னார்கள். ஓட்டு வீடு எல்லாவற்றையும் அடித்து உடைத்துவிட்டார்கள். என் குழந்தைக்கு வயது 1 ½. எனக்கு வெளிக்காயம் இல்லை. உள்காயம் தான். என் வீடு கூரை வீடு. சருவை இழுத்துவிட்டார்கள். வீட்டிற்கு வெளியே கிடந்த பாத்திரங்களை உடைத்தார்கள். வீட்டிற்கு வெளியே வந்தவர்களையும் அடித்துவிட்டார்கள். பைக், ஸ்கூட்டி போன்ற வாகனங்களை ரோட்டிலேயே வைத்து உடைத்துவிட்டார்கள். அண்ணாதுரை, மணிமேகலை, ரவி மற்றும் 7, 8 பேருக்கு காயம் ஏற்பட்டது. ஜெயங்கொண்டம் மருத்துவமனைக்கு சென்றோம். போலீஸில் யார் புகார் கொடுத்தார்கள் என்று ஞாபகம் இல்லை. மருத்துவமனைக்கு DSP வந்து விசாரித்தார்கள். என்னை DSP விசாரித்தபோது நடந்ததை சொன்னேன். நான் அந்த சம்பவத்திற்கு பிறகு சென்னைக்கு சென்று வசித்து வருகிறேன். தற்போது தான் சாட்சி சொல்வதற்காக இங்கு வந்துள்ளேன். என்னை அடித்தவர் புலிக்குட்டி என்பவர் அவர் தற்போது உயிருடன் இல்லை.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

DSP விசாரித்தபொழுது என்னை புலிக்குட்டி என்பவர் அடித்ததாக நான் சொன்னேனா என்றால் இல்லை. சம்பவ சமயத்தில் ஆஜர் எதிரிகள் யாரும் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. நான் தற்போது முதல் விசாரணையில் சொன்னதைத்தான் DSP விசாரித்தபொழுதும் சொன்னேனா என்றால் ஆமாம். DSP என்னை விசாரித்தபொழுது நான் 30 க்கும் மேற்பட்ட நபர்களின் பெயரை நான் சொல்லவில்லை. DSP விசாரித்தபொழுது நான் யார் பெயரையும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவத்தன்று பாத்திரம் விளக்கிக்கொண்டிருந்ததாகவும் அப்பொழுது சம்பவத்தை பார்த்ததாக

சொல்வதற்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>அரசு தரப்பில் மறுவிசாரணை</u>**

அன்றைய தேதியில் வந்த நபர்களை என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும். ஆஜர் எதிரிகளில் மஞ்சள் சட்டைக்காரர் (நீதிமன்றம் கேட்டபோது அவர் பெயர் ராஜா என்று சொன்னர்.), வெள்ளை சட்டைக்காரர் (நீதிமன்றம் கேட்டபோது அவர் பெயர் தெய்வசிகாமணி என்று சொன்னர்.), மற்றொரு வெள்ளை சட்டைக்காரர் (நீதிமன்றம் கேட்டபோது அவர் பெயர் சங்கர் என்று சொன்னர்.)

**<u>மறு விசாரணை</u>**

நான் அடையாளம் காட்டியவாறு மஞ்சை சட்டைக்காரர், வெள்ளை சட்டைக்காரர்கள் என்று கூறும் நபர்களுக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அவர்கள் சம்பவ இடத்திற்கே வரவில்லை என்றாலும் சரியல்ல.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SPL.S.C.No.53/2019** |
| Prosecution Witness : | **LW – 24 / PW - 11** |
| Name : அஜய் | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **04.04.2025**

**(21 ம் எதிரிக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)**

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற WP 33878/2024 உத்தரவின் அடிப்படையில் Home (Courts. VI A) Department 09.12.2024 தேதியிட்ட G.O.(D). No. 1485 ன் படி வழக்கறிஞர் திரு.B.மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் பொன்பரப்பி காந்தி நகர் காலனி தெருவில் வசித்து வருகிறேன். நான் பறையன் வகுப்பைச் சார்ந்தவர். அ.சா.1 குணசீலன் என் அப்பா. எங்கள் காந்தி நகர் காலனியில் எங்கள் பறையர் வகுப்பைச் சார்ந்தவர்கள்தான் வசிக்கிறோம். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் அனைவரும் வன்னியர் சாதியைச் சார்ந்தவர்கள். எதிரிகளும் எங்கள் ஊர்க்காரர்கள் தான். சுமார் 6 வருடத்திற்கு முன்பு 2019 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் நடந்தது. விசிக திமுக சார்பில் திருமாவளவன் என்பவர் பானை சின்னத்தில் தேர்தலில் நின்றார். அவரை எதிர்த்து பாமக, அதிமுக கூட்டணியில் அதிமுக சார்பில் வேட்பாளர் நின்றார். அந்த தேர்தலின்போது எதிரிகள் பாமகவுக்கு ஆதரவாக வேலை பார்த்தார்கள். எதிரிகள் பாமக கட்சியை சார்ந்தவர்கள். நான் காலை 11.00 மணியளவில் ஓட்டு போட்டுவிட்டு எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டேன். மதியம் 02.30 முதல் 03.00 மணியளவில் பிரச்சனை நடப்பதாக எனது நண்பர் செல்வகணபதி எனக்கு போன் செய்தார். என்னை வரச்சொல்லி

கூப்பிட்டார். நான் பைபாசிலிருந்து எங்கள் காலனி தெருவிற்கு வரும் ரோட்டு முனைக்கு சென்றேன். அப்போது ஆஜர் எதிரிகள் அங்கு இருந்தார்கள். அவர்கள் கையில் குச்சி, கல், இரும்பு பைப் ஆகியவற்றை வைத்திருந்தார்கள். செல்வகணபதியின் மண்டையில் அடிப்பட்டிருந்தது. அப்போது சாதி பிரச்சனை ஆகிவிட்டது. ஆஜர் எதிரிகள் எல்லோரும் சேர்ந்து செல்வகணபதியை அடித்து விட்டதாக சொன்னார்கள். லேடீஸ் ஹாஸ்டல் பக்கத்திலிருந்து கல் ஒன்று வந்து என் மீது விழுந்தது. அதில் எனக்கு இடது கையில் அடிப்பட்டுவிட்டது. என் மீது கல் வீசியது யார் என்று எனக்கு தெரியவில்லை. அங்கிருந்த எங்களது வீடுகளை அடித்து உடைக்க ஆரம்பித்துவிட்டார்கள். நிறைய வண்டிகளை உடைத்துவிட்டார்கள். ஒரு **TVS 50** வாகனத்தை கொளுத்திவிட்டார்கள். உடைக்கப்பட்ட வண்டியில் **TVS Star City** யும் ஒன்று. என்னுடைய வண்டி எண். **TVS 45 AK 6855** ஆகும். மேலும் வெற்றிவேல், ரவி, செல்வகணபதி மற்றும் எனக்கும் மற்றும் **13** பேருக்கும் காயம் ஏற்பட்டது. நாங்கள் வீட்டிற்குள் சென்று ஒளிந்துகொண்டபோது வெளியில் இருந்து பறத்தேவிடியா பசங்களா என்று திட்டும் சத்தம் கேட்டது. காயம்பட்டவர்கள் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். சம்பவம் சம்பந்தமாக எனது அப்பா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். எனது வண்டிக்கு நஷ்ட ஈடு எதுவும் நான் பெறவில்லை. காவல் நிலையத்திலிருந்து நான் எனது வண்டியை பெற்றுக்கொண்டு பிறகு விற்றுவிட்டேன். மருத்துவமனையில் **DSP** விசாரித்தார். **DSP** விசாரித்தபோது நான் நடந்த சம்பவத்தை சொன்னேனா என்றால் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவ சமயத்தில் எதிரிகள் சம்பவ இடத்திற்கே வரவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளில் திமுக கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள் என்றால் அவர்களில் யார் எந்த கட்சி என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளில் நிறைய பேர்களின் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் தற்போது முதல் விசாரணையில் சொன்னதைத்தான் DSP விசாரித்தபோதும் சொன்னேனா என்றால் ஆமாம். யாரும் சாதியை சொல்லி திட்டவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொன்னதுபோல சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில்

எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் நான் சொல்லும் சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை–</u>**இல்லை

(ஓம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SPL.S.C.No.53/2019** |
| Prosecution Witness : | **LW – 26 / PW - 12** |
| Name : பிரகாஷ் | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **04.04.2025**

**(21 ம் எதிரிக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)**

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற **WP 33878/2024** உத்தரவின் அடிப்படையில் **Home (Courts. VI A) Department** 09.12.2024 தேதியிட்ட **G.O.(D). No. 1485** ன் படி வழக்கறிஞர் திரு.**B.**மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் பொன்பரப்பி காந்தி நகர் காலனி தெருவில் வசித்து வருகிறேன். நான் பறையன் வகுப்பைச் சார்ந்தவர். அ.சா.1 குணசீலன் என் அப்பா. எங்கள் காந்தி நகர் காலனியில் எங்கள் பறையர் வகுப்பைச் சார்ந்தவர்கள்தான் வசிக்கிறோம். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் அனைவரும் வன்னியர் சாதியைச் சார்ந்தவர்கள். எதிரிகளும் எங்கள் ஊர்க்காரர்கள் தான். 2019 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் நடந்தது. விசிக திமுக சார்பில் திருமாவளவன் என்பவர் பானை சின்னத்தில் தேர்தலில் நின்றார். அவரை எதிர்த்து பாமக, அதிமுக கூட்டணியில் குரு வேட்பாளராக நின்றார். நான் காலை 08.30 மணியளவில் ஓட்டு போட்டுவிட்டு வீட்டிற்கு 12.30 மணியளவில் வந்துவிட்டேன். சுமார் 1.00 மணியளவில் ரோட்டில் சத்தம் கேட்டது. நானும் என் நண்பன் ஜெகதீஷ் என்பவரும் அங்கு போனோம். அப்போது அங்கு பானையை ஆஜர் எதிரிகள் உடைத்தார்கள். எங்கள் திருமாவளவன் கம்பத்தை இவர்கள் தான் உடைத்துவிட்டார்கள். காலனிக்குள்

எல்லோரும் தப தப என்று வந்தார்கள். அவர்கள் வரும்பொழுதே கல், குச்சி ஆகியவற்றை எடுத்து வந்தார்கள். கல்லை விட்டு வீட்டு ஓட்டின் மீது எறிந்தார்கள். 100, 120 பேருக்கு மேல் வந்து பறத்தேவிடியா பயலுகளா என்ற திட்டிக்கொண்டே வீடுகளை அடித்து உடைத்தார்கள். பொன்பரப்பி காலனியிலிருந்த என் வீடு உட்பட எல்லா வீட்டையும் அடித்து உடைத்துவிட்டார்கள். எனக்கு கல் அடிப்பட்டதில் இடது கை முட்டி வீக்கமாகிவிட்டது. எனது ஊரிலிருந்து 20 பேருக்கு பக்கமாக காயம் ஏற்பட்டுவிட்டது. செல்வா, அஜய், கௌதமி, அம்பாயிரம் மற்றும் பலருக்கும் காயம் ஏற்பட்டது. அந்த கூட்டத்தில் எதிரிகள் யார் யார் இருந்தார்கள் என்று கேட்டால் அந்த நீல சட்டைக்காரர் என்று சாட்சி அடையாளம் காட்டினார். (நீதிமன்றம் அவரின் பெயரை கேட்க வெற்றிவேல் என்று சொன்னார்) நான் பயந்துகொண்டு மருத்துவமனைக்கு போகவில்லை. என் அப்பா தான் மெடிக்கலில் மருந்து வாங்கி வந்து கொடுத்தார். புகார் கொடுத்தது யார் என்று எனக்கு தெரியாது. செந்துறையில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் அடையாளம் காட்டிய நீல சட்டைக்காரர் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் நான் தவறுதலாக அவரை அடையாளம் காட்டுகிறேன் என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல சம்பவமே நடக்கவில்லை என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தபொழுது தற்போது நான் நீதிமன்றத்தில் சொன்னதைத்தான் சொன்னேன். அந்த நீல சட்டைக்காரரின் பெயர் எனக்கு ஏற்கனவே தெரியுமா என்றால் இப்போது அவர் சொல்லித்தான் தெரியும். எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>–இல்லை

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SPL.S.C.No.53/2019** |
| Prosecution Witness : | **LW – / PW - 13** |
| Name : பிரபு | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **04.04.2025**

**(21 ம் எதிரிக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)**

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற **WP 33878/2024** உத்தரவின் அடிப்படையில் **Home (Courts. VI A) Department 09.12.2024** தேதியிட்ட **G.O.(D). No. 1485** ன் படி வழக்கறிஞர் திரு.**B.**மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் பொன்பரப்பி காந்தி நகர் காலனி தெருவில் வசித்து வருகிறேன். நான் பறையன் வகுப்பைச் சார்ந்தவர். அந்த காலனியில் எங்கள் பறையர் வகுப்பைச் சார்ந்தவர்கள் தான் வசிக்கிறோம். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் அனைவரும் வன்னியர் சாதியைச் சார்ந்தவர்கள். எதிரிகளும் பொன்பரப்பி ஊர்க்காரர்கள் தான். சுமார் 6 வருடத்திற்கு முன்பு 2019 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் நடந்தது. விசிக திமுக சார்பில் எங்கள் தலைவர் திருமாவளவன் பானை சின்னத்தில் தேர்தலில் நின்றார். அவரை எதிர்த்து பாமக, அதிமுக கூட்டணியில் E.P.சந்திரசேகர் வேட்பாளராக நின்றார். நான் காலையில் 09.00 மணிக்கு மேல் ஓட்டு போட்டுவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். சுமார் 02.30 மணியளவில் வெளியே ஒரே சத்தமாக இருந்தது. சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்தேன். பொன்பரப்பி லேடிஸ் ஹாஸ்டல் பக்கத்திற்கு போனேன். அப்போது எதிரிகள் காலனிக்குள் இரும்பு கம்பி, உருட்டு கட்டை ஆகியவற்றை எடுத்துக்கொண்டு பறத்தேவிடியா பசங்களா நீ ஓட்டு போட்டு விட்டு இந்த ஊருக்குள் இருந்துவிடுவீர்களா என்று பேசினார்கள். எங்கள் வீடுகளையெல்லாம் அடித்து

உடைத்துவிட்டார்கள். எங்கள் வீட்டிற்கும், வண்டிக்கும் சேதாரம் ஆகிவிட்டது. ஆட்களையும் அடித்துவிட்டார்கள். 13 பேருக்கு மேல் காயம் ஆனது. என் வீட்டிற்கு சேதாரம் எதுவும் இல்லை. கிருஷ்ணமூர்த்தி, ரவி, வடிவேல், செல்வகணபதி, மணிமேகலை, கௌதம் மற்றும் சிலருக்கும் காயம் ஏற்பட்டது. ஒரே கூட்டமாக சேர்ந்து பறத்தேவடியா மகன்களா, வெட்டுடா குத்துடா என்று சொல்லிக்கொண்டே அடித்துக்கொண்டே போனார்கள். அவ்வாறு அந்த கூட்டத்தில் இருந்தவர்களில் ஆஜர் எதிரிகளை என்னால் அடையாளம் காட்ட முடியும். சொக்கன் என்று ஒரு நபரை சாட்சி அடையாளம் காட்டினார். (நீதிமன்றம் அவர் பெயர் கேட்க தெய்வசிகாமணி என்று சொன்னார்.) ராஜா, கொளஞ்சி, மதியழகன், கை கட்டியிருக்கும் பழனிமுத்து ஆகியோர்கள் அந்த கூட்டத்தில் இருந்தார்கள். காயம்பட்ட நபர்கள் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு போனார்கள். எனக்கு சாதாரண காயம் என்பதால் மருத்துவமனைக்கு செல்லவில்லை. குணசீலன் என்பவர் புகார் கொடுத்தார். நடந்த சம்பவம் குறித்து DSP என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

மதியழகன், கொளஞ்சி, பழனிமுத்து ஆகியோர்கள் சம்பவ இடத்திலிருந்ததாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. எதிரிகள் வந்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் யாரும் சாதியை சொல்லி திட்டவில்லை என்றாலும் சரியல்ல. கட்சி தகராறில் யாரோ செய்த சம்பவத்தை வைத்து இந்த எதிரிகள் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னவைகளைத்தான் DSP விசாரித்தபோதும் சொன்னேன். எனக்கு எந்த காயமும் இல்லை என்றாலும் நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும் வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>–இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.S.C.No.53/2019**

Prosecution Witness : **LW –32 / PW - 14**

Name : செல்வம் Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **04.04.2025**

**(21 ம் எதிரிக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)**

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற **WP 33878/2024** உத்தரவின் அடிப்படையில் **Home (Courts. VI A) Department 09.12.2024** தேதியிட்ட **G.O.(D). No. 1485** ன் படி வழக்கறிஞர் திரு.**B.**மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் பொன்பரப்பி காந்தி நகர் காலனி தெருவில் வசித்து வருகிறேன். நான் பறையன் வகுப்பைச் சார்ந்தவர். அந்த காலனியில் எங்கள் பறையர் வகுப்பைச் சார்ந்தவர்கள் தான் வசிக்கிறோம். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் அனைவரும் வன்னியர் சாதியைச் சார்ந்தவர்கள். எதிரிகளும் பொன்பரப்பி ஊர்க்காரர்கள் தான். அவர்கள் எல்லோரும் ரோட்டிற்கு அந்த பக்கம் வசிக்கிறார்கள். சுமார் 6 வருடத்திற்கு முன்பு 2019 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் நடந்தது. விசிக, திமுக சார்பில் எங்கள் தலைவர் திருமாவளவன் பானை சின்னத்தில் தேர்தலில் நின்றார். அவரை எதிர்த்து பாமக, அதிமுக கூட்டணியில் அதிமுக வேட்பாளர் நின்றார். எதிரிகள் எல்லோரும் பாமக கட்சியை சேர்ந்தவர்கள். நான் அன்று காலையில் சுமார் 12.00 மணியளவில் ஓட்டு போட்டுவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன் பிறகு சுமார் 02.30 மணியளவில் வெளியே ஒரே சத்தமாக இருந்தது. சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்தேன். எதிரிகள் எல்லோரும் அந்த பக்கமாக கட்டை, கம்பி, உருட்டு கட்டை ஆகியவற்றை எடுத்துக்கொண்டு

வந்து பானை சின்னத்திற்கு ஓட்டு போட்டீங்களா பறத்தேவிடியா பசங்களா என்று திட்டிவிட்டு வீட்டு ஓடுகள், சாமான்கள், இருசக்கர வாகனங்கள் ஆகியவற்றை அடித்து உடைத்துவிட்டார்கள். எனது இருசக்கர வாகனம் **TN 02 BA 8739** என்ற **Bajaj Pulsar** வாகனத்தை எதிரிகள் கூட்டமாக அடித்து உடைத்துவிட்டார்கள். அதன் சேத மதிப்பு 1 லட்சம் இருக்கும். அந்த வாகனம் காவல் நிலையத்தில் தான் உள்ளது. நான் வாங்கிக்கொண்டு போகவில்லை. 8, 10 பேர் அடிவாங்கினார்கள். அடிபட்டவர்கள் பிரபு, செல்வராஜ், மணிமேகலை, செல்வகணபதி, அஜய், பிரகாஷ் மற்றும் காயம் பட்டவர்கள் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள். நடந்த சம்பவம் குறித்து குணசீலன் புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக **DSP** என்னை விசாரித்தார். **DSP** விசாரித்தபோது கூட்டமாக வந்தவர்கள் பெயர்களை சொன்னேனா என்றால் சொன்னேன். என் வண்டி சேதமானதை அடையாளம் காட்டினேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

DSP யிடம் எத்தனை பேர் பெயர்களை சொன்னேன் என்றால் எனக்கு தெரிந்த 4, 5 பெயரை சொன்னேன். எதிரிகள் எல்லோரும் வந்ததாகவும் வீடுகளையும் இருசக்கர வாகனங்களையும் எதிரிகள் அடித்து உடைத்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. வண்டியின் ஆர்.சி. புத்தகம் என் பெயரில் உள்ளது. ஆனால் நான் அந்த வண்டியை மனு செய்து வாங்கவில்லை. நான் தற்போது முதல் விசாரணையில் சொன்னதைத்தான் DSP விசாரித்தபோதும் சொன்னேனா என்றால் ஆமாம். எதிரிகள் மற்றவர்களை அடித்து காயம்படுத்தியதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. கட்சி தகராறில் யாரோ அடித்ததை நான் எதிரிகள் தான் என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>–**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.S.C.No.53/2019**

Prosecution Witness : **LW –33 / PW - 15**

Name : **கண்ணதாசன்** Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **04.04.2025**

**(21 ம் எதிரிக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)**

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற **WP 33878/2024** உத்தரவின் அடிப்படையில் **Home (Courts. VI A) Department** 09.12.2024 தேதியிட்ட **G.O.(D). No. 1485** ன் படி வழக்கறிஞர் திரு.**B.**மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் பொன்பரப்பி காந்தி நகர் காலனி தெருவில் வசித்து வருகிறேன். நான் இந்து–பறையன் வகுப்பைச் சார்ந்தவர். எங்கள் காலனியில் எங்கள் இந்து–பறையர் வகுப்பைச் சார்ந்தவர்கள் தான் வசிக்கிறோம். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் அனைவரும் வன்னியர் சாதியைச் சார்ந்தவர்கள். எதிரிகளும் பொன்பரப்பி ஊர்க்காரர்கள் தான். 18.04.2019 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் நடந்தது. விசிக கட்சி சார்பில் திருமாவளவன் அவர்கள் பானை சின்னத்தில் தேர்தலில் நின்றார். அவரை எதிர்த்து பாமக, அதிமுக கூட்டணியில் அதிமுக வேட்பாளர் நின்றார். எதிரிகள் எல்லோரும் பாமக கட்சியை சேர்ந்தவர்கள். நான் தேர்தல் அன்று மதியம் சுமார் 12.00 மணியளவில் ஓட்டு போட போனேன். அப்போது பானையை போட்டு உடைத்திருந்தார்கள். நான் ஓட்டு போட்டு விட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன் பிறகு சுமார் 02.45 மணியளவில் வெளியே ஒரே சத்தமாக இருந்தது. சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்தேன். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் கொடி

கம்பம் எங்கள் காலனி தெரு முனையில் இருந்தது அதை அறுத்திருந்தார்கள். நிறைய பேர் காலனி உள்ளே ஓடி வந்தார்கள். பானை சின்னத்திற்கு ஓட்டு போட்டு விட்டு பறதேவிடியா பசங்களா என்று கத்திக்கொண்டே எதிரிகளும் வந்தார்கள். எங்களுடைய வீடுகளையும் வண்டி, வீட்டிற்கு வெளியே இருக்கும் பாத்திரங்களை அடித்து உடைத்துவிட்டார்கள். எனக்கு சொந்தமான இருசக்கர வாகனம் TN 31 U 6733 வாகனத்தை ஆஜர் எதிரிகள் சேர்ந்து கொளுத்திவிட்டார்கள். நான் அந்த வாகனத்தை அப்போது 8 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கினேன். எங்கள் ஆட்கள் 10 பேருக்கு மேல் காயமாகிவிட்டது. ரவி, வடிவேல், அஜய், செல்வகணபதி, மணிமேகலை, பிரபு, கௌதமி மற்றும் சிலரும் அதில் அடக்கம். காயம்பட்டவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு போனார்கள். என் மனைவி அப்போது என்னை வீட்டிற்குள்ளே வைத்து பூட்டி விட்டார்கள். ஆஜர் எதிரிகள் எல்லோரும் தான் வந்தார்கள். இது சம்பந்தமாக DSP என்னை விசாரித்தார். DSP விசாரித்தபோது யார் யார் என்று பெயர்களை சொன்னேனா என்றால் சொன்னேன். தற்போது நீதிமன்றத்தில் போலீசார் கொண்டுவந்திருக்கும் TN 31 U 6733 இருசக்கர வாகனம் என்னுடையதுதான். ஆனால் இந்த வாகனம் குறித்து எந்த படிவம் 95ம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்பதால் இந்த வாகனம் மீண்டும் காவல் நிலைய பொறுப்பிலேயே ஒப்படைக்கப்படுகிறது. (வண்டி எரிக்கப்படவில்லை. அடித்து உடைக்கப்பட்ட நிலையில் உள்ளது) அந்த இருசக்கர வாகனம் காவல் நிலையத்தில் ஏலத்தில் நான் வாங்கினேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

DSP யிடம் நான் எத்தனை பேர் பெயர்களை சொன்னேன் என்றால் மற்ற சாட்சிகளான செல்வம், பிரபு ஆகியோர் தான் பெயர்களை சொன்னார்கள். நான் DSP யிடம் எதுவும் சொல்லவில்லை. எதிரிகள் தான் எங்கள் வீடுகளையும் வாகனங்களையும்அடித்து உடைத்தார்கள் என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய வாகனம் எரிக்கப்படாத நிலையில் தான் நீதிமன்றத்தில் போலீசாரால் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்றால் பெட்ரோல் டேங்க்கை திறந்து உள்ளே தீக்குச்சியை போட்டார்கள். ஆனால் நான் வீட்டிற்குள் இருந்ததால் யார் தீக்குச்சியை கொளுத்தி போட்டார்கள் என்று எனக்கு

தெரியவில்லை.  நான் ஏன் வீட்டிற்குள் இருந்தேன் என்று கேட்டால் என் வீட்டுக்காரம்மா என்னை வீட்டிற்குள்ளே தள்ளி கதவை சாத்திவிட்டார். வெளியே எதிரிகள் வருவதை பார்த்துவிட்டுதான் என்னை வீட்டுக்குள்ளே வைத்துவிட்டார்கள். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை–</u>**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.S.C.No.53/2019**

Prosecution Witness : **LW –34 / PW - 16**

Name : புனிதராஜன் Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **04.04.2025**

**(21 ம் எதிரிக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)**

**இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற WP 33878/2024 உத்தரவின் அடிப்படையில் Home (Courts. VI A) Department 09.12.2024 தேதியிட்ட G.O.(D). No. 1485 ன் படி வழக்கறிஞர் திரு.B.மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.**

**முதல் விசாரணை**

நான் பொன்பரப்பி காந்தி நகர் காலனி தெருவில் வசித்து வருகிறேன். நான் இந்து–பறையன் வகுப்பைச் சார்ந்தவர். எங்கள் காலனியில் எங்கள் இந்து–பறையர் வகுப்பைச் சார்ந்தவர்கள் தான் வசிக்கிறோம். சாட்சி சொன்னவர்கள் அனைவரும் எங்கள் சாதியைச் சார்ந்தவர்கள்தான். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் அனைவரும் வன்னியர் சாதியைச் சார்ந்தவர்கள். எனக்கு சொந்தமான இருசக்கர வாகனம் TN 61 B 6888. 2019 MP தேர்தல் சமயத்தில் அந்த வண்டி உடைக்கப்பட்டது. அந்த தேர்தலில் பானை சின்னத்தில் திருமாவளவனும் அவரை எதிர்த்து அதிமுக காரர்களும் நின்றார்கள். அதிமுகவை பாமக ஆதரித்தது. தேர்தல் அன்று தான் சென்னையிலிருந்து பொன்பரப்பி வந்தேன். நான் சென்னையில் சுமை தூக்கும் தொழிலாளியாக இருக்கிறேன். தேர்தலில் காலை 08.00 மணிக்கு ஓட்டு போட்டேன். என் மகளுக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் ஜெயங்கொண்டத்திற்கு அழைத்து போய் விட்டேன். அப்படியே என் மாமியார் வீட்டிற்கும் போய் விட்டு இரவு 07.00 மணியளவில்தான் பொன்பரப்பிக்கு வந்தேன்.

நான் வீட்டிற்கு எதிரே இருக்கும் மாரியம்மன் கோவில் எதிரில் வண்டியை நிறுத்திவிட்டு தான் ஜெயங்கொண்டம் போயிருந்தேன். வந்து பார்த்தபொழுது எனது வண்டி உடைக்கப்பட்டிருந்தது. எனது வீட்டிற்கு எந்த சேதமும் இல்லை. மற்றபடி ஊரில் என்ன நடந்தது என்று கேட்டால் எனக்கு அதுப்பற்றி தெரியாது. எனது வண்டியை உடைத்தது யார் என்றும் எனக்கு தெரியாது.

மேற்சொன்ன சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து அதன்படி அவரை பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

எனது உடைக்கப்பட்டது குறித்து **DSP** விசாரித்தாரா என்றால் விசாரித்தார். ஆனால் **DSP** விசாரித்தபோது எதிரிகள் 33 பேர் குறித்தும் அவரிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரிகள் சாதியை சொல்லி திட்டியதாக நான் **DSP** யிடம் சொல்லவில்லை. எதிரிகள் வீடுகளை உடைத்ததாகவும் வாகனங்களை சேதப்படுத்தியதாகவும் என் வீட்டின் முன்பக்க ஓட்டை உடைத்ததாகவும் சொன்னேனா என்றால் இல்லை. வண்டி உடைக்கப்பட்டிருந்தது பற்றி தான் சொன்னேன். வண்டியின் மதிப்பு 1 இலட்சம். தற்போது அந்த வண்டி நீதிமன்றத்திற்கு போலீசாரால் கொண்டுவரப்பட்டிருக்கிறது. 1 இலட்சம் மதிப்புள்ள வண்டியின் மதிப்பு 21 ஆயிரம் என்று நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இந்த சம்பவத்தில் காயம்பட்ட நபர்கள் பற்றியும் நான் **DSP** விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.**

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.